## தொண்டைச்சளி (ஸ்ப்யூட்டம்) மாதிரி

தொண்டைச்சளி என்பது நீங்கள் இருமும் போது உங்கள் நுரையீரல் அல்லது தொண்டையிலிருந்து வெளிவரும் கபம். உங்களுக்கு நுரையீரலில் காசநோய் இருப்பதற்கான அறிகுறிகள் இருந்தால் உங்கள் தொண்டைச்சளியின் மாதிரிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு ஆய்வுக் கூடத்திற்கு அனுப்பி வைக்கப்படும். மைக்ரோஸ்கோப்பின் அடியில் வைத்து அதில் காசநோய் கிருமிகள் இருக்கின்றனவா என்று பரிசோதிக்கப்படும்.

மைக்ரோஸ்கோப் அடியில் பார்க்கும்போது தென்படும் கிருமிகள் தான் ஸ்ப்யூட்டம் ஸ்மியர் பாசிட்டிவ் டி.பி ஆகும். நீங்கள் இருமும் போதும் தும்மும் போதும் மற்றவர்களுக்கு காசநோயை தொற்ற வைக்கக்கூடும்.
மைக்ரோஸ்கோப்பின் அடியில் கிருமிகள் தென்படாமல், மற்ற பரிசோதனைகள் உங்களுக்கு காசநோய் இருப்பதாகக் கூறினால் அது ஸ்ப்யூட்டம் ஸ்மியர் நெகட்டிவ் டி.பி. ஆகும். அப்படியிருந்தால் உங்களால் மற்றவர்களுக்கு நோய் தொற்று ஏற்படுவதற்கு இருக்கும் சாத்தியம் குறைவு.

## கல்ச்சர் பரிசோதனை

உங்களுக்கு ஸ்ப்யூட்டம் பரிசோதனை நடைபெற்ற பிறகு அந்த மாதிரியில் காசநோய் கிருமிகள் வளர்கின்றனவா என்று பரிசோதிக்கப்படும். இது தான் கல்ச்சர் பரிசோதனை ஆகும். நுரையீரல் அல்லது தொண்டைத் தவிர உடலின் வேறு பகுதிகளில் தீவிரமான டி.பி. இருந்தால், காசநோய் இருப்பதாக சந்தேகிக்கப்படும் இடத்திலிருந்து திசுக்களின் மாதிரி எடுக்கப்படும் (இதுதான் பயாப்ஸி) அல்லது கொஞ்சம் அணுக்கள் அல்லது திரவ வாயு ஊசி மூலமாக எடுக்கப்படும். பிறகு இதனை ஆய்வுக் கூடத்திற்கு அனுப்பி அதில் காசநோய் கிருமிகள் இந்த மாதிரியிலும் (கல்ச்சர்) வளர்கின்றனவா என்று பார்ப்பார்கள்.
ஏனென்றால் காசநோய் கிருமிகள் வளர்ந்து மெதுவாக பெருகுகின்றன, முடிவினை அளிப்பதற்கு முன்பு கல்ச்சர் பரிசோதனை 8 வாரங்கள் வரை செய்யப்படலாம். உங்களது உடலில் மார்பினைத் தவிர வேறு இடங்களில் தீவிரமான காசநோய் இருந்தால் மார்பிலும் இருக்கிறதா என்று பார்க்க மார்பு x-ray எடுக்கப்படும்.

## டி.பி. அலர்ட்டைப் பற்றி

**TB Alert** என்பது காசநோய் பற்றி உலகளவில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் யூ.கே.வில் உள்ள தொண்டு நிறுவனம். நோயாளிகளுக்கு காசநோய் பற்றிய தகவல்களைக் கொடுத்து என்.ஹெச்.எஸ்.ஸிற்கு ஆதரவு அளிக்கிறது. யூ.கே.விலும் வளர்ந்து வரும் நாடுகளிலும் நோயாளிகள் சரியான தகவல்களும் சிகிச்சையும் பெற வேண்டும் என்பதற்கான செயல்திட்டங்களுக்கு நாங்கள் ஆதரவு அளிக்கிறோம். உங்கள் ஆதரவுடன் காசநோய் பற்றிய விழிப்புணர்வை உலகம் முழுவதும் உண்டாக்கி நிறைய உயிர்களை எங்களால் காப்பாற்ற முடியும்.

காசநோயிலிருந்து உங்கள் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் பாதுகாப்பு அளியுங்கள் - அனைத்து காசநோய் மருந்துகளையும் எடுத்து கொள்ளுங்கள்

**உங்களுக்கு** உதவி செய்யவும் அறிவுரை வழங்கவும் காசநோய் செவிலியர் இருக்கிறார் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு செய்யப்பட்ட சிகிச்சை திருப்திகரமாக இல்லையென்றாலும் நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டிய மருந்து சம்பந்தமாக ஏற்படும் சந்தேகங்களையும் உங்களுடைய டி.பி. செவிலியரைத் தொடர்புக் கொண்டு கேளுங்கள்.

உங்கள் காசநோய் செவிலியர் பெயர்: ____________________

உங்கள் மருத்துவர் பெயர்: ____________________

தொடர்புக் கொள்ள வேண்டிய எண்: ____________________

மின்னஞ்சல்: ____________________

**TB Alert** என்பது காசநோய் பற்றி உலகளவில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் யூ.கே.வில் உள்ள தொண்டு நிறுவனம். யூ.கே.விலும் வளர்ந்து வரும் நாடுகளிலும் நோயாளிகள் சரியான தகவல்களும் சிகிச்சையும் பெற வேண்டும் என்பதற்கான செயல்திட்டங்களுக்கு நாங்கள் ஆதரவு அளிக்கிறோம். உங்கள் ஆதரவுடன் காசநோய் பற்றிய விழி ப்புணர்வை உலகம் முழுவதும் உண்டாக்கி நிறைய உயிர்களை எங்களால் காப்பாற்ற முடியும்.

**TB Alert**,
Community Base,
113 Queens Road,
Brighton BN1 3XG
தொலைபேசி: 01273 234030

மேலும் விவரங்களுக்கு அல்லது இந்த பிரசுரத்தின் பிரதிகளைப் பெறுவதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 01273 234 770 (அலுவலக நேரத்தில் மட்டும்).

டி.பி.அலெர்ட்டிற்கு நன்கொடை வழங்க அல்லது தொண்டு செய்ய விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 01273 234 784 (அலுவலக நேரத்தில் மட்டும்).

அல்லது www.tbalert.org என்கிற இணையதளத்தைப் பாருங்கள

இந்தப் பிரசுரத்தில் காசநோய் மற்றும் ஹெச்.ஐ.வி. பரிசோதனை மற்றும் சிகிச்சை சம்பந்தமாகக் கொடுக்கப்பட்டுள்ளத் தகவல்கள் உங்களுக்கு இவற்றைப் பற்றிய பொதுவான தகவல்களை அளித்திருக்கும். நோயாளிகளின் நலனில் அக்கறைக் கொண்டுள்ள மருத்துவர்களின் அறிவு, நிபுணத்துவம், திறமை ஆகியவற்றை இது ஈடு செய்யாது. பரிசோதனை மற்றும் சிகிச்சை சம்பந்தமான சந்தேகங்களை உடல் நல பாதுகாப்பு நிபுணர்களிடம் கேட்டுக் கொள்ள வேண்டும்.

இது வட மேற்கு லண்டன் டி.பி. நெட்வொர்க்கால் செய்யப்பட்டது.

இது இங்கிலாந்தில் பதிவு செய்யப்பட்ட, உத்திரவாதங்கள் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நிறுவனம் இதன் பதிவு எண். 3606528 பதிவு தருமஸ்தாபன எண். 1071886 வடிவமைப்பு: வொர்க்சாங், லண்டன் 020 8352 8300

# காசநோய் (டி.பி) மற்றும அதன் பரிசோதனைகள்



## காசநோய் என்றால் என்ன?

காசநோய் என்பது ஒரு வகை பாக்டீரியா மூலமாகப் பரவும் நோய். இது பரவலாக நுரையீரலை பாதிக்கும். இது தீவிரமான டி.பி. எனப்படுகிறது. ஆனால் இவை உடலின் எந்த பகுதியையும் பாதிக்கலாம். ஆறு மாதங்களுக்கான மருந்தினை எடுத்துக் கொண்டாலே காசநோயை குணப்படுத்திவிடலாம். நுரையீரல் அல்லது தொண்டையை பாதிக்கும் காசநோய்தான் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது. சரியான மருந்தை எடுத்துக் கொண்டால் இரண்டு வாரங்களிலேயே பல பேருக்கு இதனை குணப்படுத்திவிடலாம்.

உணரமுடியாத காசநோய் அல்லது காசநோய் தொற்று இருப்பதற்கும் வாய்ப்புள்ளது. இதன் அர்த்தம் என்னவென்றால், உங்களுக்குள் கிருமிகள் இருக்கிறது ஆனால் உங்கள் உடல் இதனை கட்டுப்பாட்டில் வைத்தும் உங்களுக்கு உடல் நிலை சரியில்லாமல் போவதையும் தடுக்கிறது. மறைந்துள்ள காசநோய் உள்ளவர்களுக்கு எந்த அறிகுறியும் இருக்காது மற்றவர்களுக்கும் பரவாது.

## டி.பி. எப்படி வருகிறது?

நுரையீரல் காசநோயால் பாதிக்கப்பட்டவர்கள் இருமினாலோ தும்மினாலோ கிருமிகள் காற்றில் பரவுகிறது. அதனை மற்றவர்கள் சுவாசிக்க நேர்கிறது. இதனால் காசநோய் வருகிறது. காசநோயினால் பாதிக்கப்பட்டவர்களிடம் அதிக நேரம் செலவிடுபவர்களுக்கும் (இவர்கள் அநேகமாக வாழ்க்கைத் துணையாகவோ, குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்களாகவோ, சில நேரம் உடன் பணிபுரிபவர்களாகவோ இருப்பர்) இந்நோய் வர அதிக வாய்ப்புள்ளது. உமிழ்வதனாலோ, பொருட்களைப் பகிர்ந்து கொள்வதனாலோ காசநோய் பரவுவதில்லை.

## காசநோயின் அறிகுறிகள் என்ன?

காசநோய் நுரையீரலில் ஏற்பட்டால் காணப்படும் சில பரவலான அறிகுறிகள்:

- **மூன்று வாரங்களுக்கு மேல் இருக்கும் இருமல்.** இது சாதாரண வறட்டு இருமலாக ஆர்ம்பிக்கும். மார்பில் தொற்று ஏற்பட்டிருந்தாலும் இப்படி இருக்கும். காசநோயினால் ஏற்படும் இருமல் தொடர்ச்சியாக பல வாரங்கள் அல்லது மாதங்களுக்கு இருக்கும். இது மேலும் மேலும் மோசமாகிக் கொண்டே செல்லும்.
- **காரணம் இல்லாமல் எடை குறைதல்.**
- **காய்ச்சல் மற்றும் இரவில் அதிக வியர்வை.** இந்த நோயினால் ஏற்படும் காய்ச்சலினால் நோயாளிகளுக்கு வியர்வை அதிகமாகும். நடுராத்திரியில் படுக்கையை மாற்றும் அளவுக்குக் கூட வியர்க்கக் கூடும்.
- **எப்போதும் இல்லாத அளவிற்கு களைப்படைதல், உடல் நிலை சரியில்லாமல் போதல்.**
- **பசியின்மை.** இந்த அறிகுறிகள் மற்ற பிரச்னைகளுக்கும் காரணமாக இருக்கலாம்.

## எனக்கு காசநோய் இருக்கிறதா என்பதை நான் எப்படி தெரிந்து கொள்வது?

உங்களுக்கு மூன்றுக்கு மேற்பட்ட அறிகுறிகள் இருந்தால் உங்களது ஜி.பி.யைப் பாருங்கள் (உங்களது ஜி.பி.யை சந்திப்பதற்கு ஏதேனும் ஒரு அறிகுறி கூட காரணமாக இருக்கலாம்). அவர்கள் காசநோய் இருப்பதற்கு வாய்ப்பு உள்ளது என்று நினைத்தால் உங்களை மார்பில் ஏற்படும் நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் உள்ளூர் மருத்துவமனைக்கோ காசநோய் மருத்துவமனைக்கோ அனுப்பி வைப்பார்கள். அங்கு பரிசோதனைகள் செய்யப்படும்.

உங்களுக்கு பரவக் கூடிய வகையில் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களைத் தெரியுமா என்று மருத்துவர் கேட்பார். பின் மருத்துவர் அந்த நபரிடம் யாரிடம் நீங்கள் அதிக நேரம் செலவிடுவீர்கள் என்று கேட்பார். பிறகு உடல் நல பாதுகாப்பு மையம் யாருக்கெல்லாம் இந்த நோய் ஏற்பட அதிக வாய்ப்புள்ளதோ அவர்கள் ஒவ்வொருவருடனும் தொடர்பு கொண்டு பரிசோதனைக்கு வரச் செய்யும்.

**பல்வேறு பரிசோதனைகளாவன:**

## சரும பரிசோதனை (மாண்டக்ஸ்)

இந்த சரும பரிசோதனையினால் உங்கள் உடலில் காசநோய் கிருமிகள் இருக்கின்றனவா என்று தெரிந்து கொள்ளலாம். பி.சி.ஜி. தடுப்பு மருந்தை எடுத்துக் கொண்டிருக்கலாம். (இது பாதுகாப்பான கிருமிகளை கொண்டுள்ளது), கிருமிகளை சுவாசித்திருக்கலாம். இதன் பெயர் தான் மாண்டக்ஸ் பரிசோதனை. இதில் டியூபர்குலின் என்கிற மருந்து சிறிய அளவில் ஊசி மூலமாக நமது சருமத்தின் முதல் பகுதிக்கு செலுத்தப்படும். இது சிறிது நேரம் வலிக்கும். நீண்ட நேரத்திற்கு வலிக்காது. இதனை 2-3 நாட்கள் கழித்துப் பார்ப்பார்கள்.

இந்தப் பரிசோதனை பாசிட்டிவாக இருந்தால், அந்த இடம் சிகப்பு நிறமாக மாறி இருக்கும். நீங்கள் அதனை பிளாஸ்திரி கொண்டு மூடக் கூடாது. அதனை சொறியவோ தேய்க்கவோ கூடாது. அதில் எண்ணை, கிரீம்கள் போன்றவற்றை போடக் கூடாது. நீங்கள் அதனை சோப்பு மற்றும் தண்ணீரால் கழுவலாம். இந்த சிகப்பு நிறம் பல்வேறு விதமான அளவிலும் நிறத்திலும் இருக்கும். மருத்துவமனையில் இருக்கும் மருத்துவரோ செவிலியரோ இதனைப் பரிசோதனை செய்து உங்களுக்கு முடிவினைத் தெரிவிப்பார்கள்.

## பாசிட்டிவ் சரும பரிசோதனை என்றால் என்ன?

பாசிட்டிவ் சரும பரிசோதனை என்பதுப் பலவற்றை குறிப்பது: நீங்கள் பி.சி.ஜி. தடுப்பு மருந்தை எடுத்துக் கொண்டிருக்கலாம். சில மாற்றங்கள் எதிர்ப்பார்க்கப்படும். அது சாதாரணமாக இருக்கும்.

உங்களுக்கு காசநோய் மறைந்திருக்கலாம். காசநோய் மறைந்துள்ளது என்பதை இரத்த பரிசோதனை செய்து ஊர்ஜிதம் செய்து கொள்ளலாம். உங்களுக்கு அக்டிவ் காசநோய் இருக்கலாம். தொடர்ந்து செய்யப்ப்டும் பரிசோதனைகளை மருத்துவர் பார்க்க வேண்டும்.

## நெகட்டிவ் சரும பரிசோதனை என்றால் என்ன?

உங்களை காசநோய் கிருமிகள் இதற்கு முன் தாக்கவில்லை என்று அர்த்தம். ஆயினும் உங்களது உடலில் இருக்கும் கிருமி மிகவும் ஆரம்ப நிலையில் இருப்பதால் பரிசோதனையின் போது தெரியாமல் இருப்பதும் இதற்கு மற்றொரு காரணமாக இருக்கலாம்.
இந்தப் பரிசோதனையை ஆறு வாரக் காலங்களுக்குத் தொடர்ந்து செய்ய வேண்டும். நெகட்டிவ் முடிவு எப்போதுமே உங்களுக்கு காசநோய் இல்லை என்று கூறிவிடாது.
உங்களுக்கு காசநோய் இல்லாமல் இருக்கலாம். ஆனால் நீங்கள் வாழும் இடத்தை வைத்தோ நீங்கள் வேலை செய்யும் இடத்தைப் பொறுத்தோ உங்களுக்கு காசநோய் ஏற்படுவதற்கு அதிக வாய்ப்பிருந்தால் பி.சி.ஜி. தடுப்பு மருந்து அளிக்கப்படும். உங்களது உடலில் எதிர்ப்பு சக்தி குறைவாக இருந்தால் (ஹெச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்டவராக இருந்தால்) உங்களுக்கு பி.சி.ஜி. அளிக்கப்படாது. இவர்களுக்கு இந்தத் தடுப்பு மருந்து ஆபத்தை விளைவிக்கக் கூடும்.

## இரத்தப் பரிசோதனை:

காசநோய்க்கென்று விசேஷ இரத்தப் பரிசோதனை உள்ளது. உங்களது சரும பரிசோதனைப் பாசிட்டிவாக இருந்து, நீங்கள் காசநோயினால் பாதிக்கப்பட்டவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்திருந்தால் (ஆனால் உங்களுக்கு அதற்கான அறிகுறி இல்லை), உங்கள் உடலில் காசநோய் மறைந்துள்ளதா என்பதைத் தெரிந்து கொள்ள நீங்கள் இந்தப் பரிசோதனையை செய்துக் கொள்ள வேண்டும். இரத்தப் பரிசோதனையின் முடிவு பாசிட்டிவாக இருப்பின், உங்களுக்கு அக்ட்டிவ் டி.பி. இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள மேலும் பல பரிசோதனைகள் செய்யப்படும்.
மறைந்திருக்கும் காசநோயைக் கொண்டிருக்கும் 35 வயதிற்குட்பட்டவர்களுக்கு மூன்று முதல் ஆறு மாதங்கள் வரை சிகிச்சை அளிக்கப்படும். ஹெச்.ஐ.வி.யால் பாதிக்கப்படாத 35 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படாது. ஏனென்றால், அவர்களது காசநோய்க்கான மருந்துகளால் நுரையீரல் பாதிக்கப்படுவதற்கு நிறைய வாய்ப்புள்ளது. ஹெச்.ஐ.வி. யால் பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன வயதிருந்தாலும் சிகிச்சை அளிக்கப்படும். ஏனென்றால் மறைந்துள்ள டி.பி. ஹெச்.ஐ.வி. நோயை வேகமாகப் பரப்பிவிடும்.

## மார்பக X-Ray

உங்களுக்கு காசநோய் அறிகுறி இருந்தால் மார்பு ஜ்-கஷீணீஹ் செய்வதற்காக அனுப்பி வைக்கப்படுவீர்கள். இதன் மூலம் மருத்துவர் உங்களுக்கு முன்போ இப்போதோ உடலில் காசநோய் இருந்ததா என்பதைத் தெரிந்து கொள்வார்.

Tamil_56295 TB Diagnosis .indd 2 10/06/2009 12:55